**மழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 10.03.2020

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2050 விகாரி, மாசி மாதம் 27ஆம் நாள் **10.03.2020 செவ்வாய்க்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

**பொருள் 01**:

தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் வளாக முன் பகுதியில் உள்ள திறந்தவெளி காலியிட பகுதிகள் பராமரிப்பின்றி உள்ளதாக தெரிவித்து தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின் பேரில் தேனி மாவட்ட உதவி ஆட்சியர் அவர்கள் நேரில் பார்வையிட்டு பேருந்து நிலைய முன்பகுதியில் உள்ள திறந்தவெளி காலியிடத்தை பசுமையாக்கி பராமரிப்பு செய்து அழகுபடுத்த தெரிவித்துள்ளார்.

மேலும், பொது மேலாளர், தேனி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் - லிட், தேனி அவர்களின் கடிதத்தில் தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய முன்பகுதியில் தென்புறம் திறந்தவெளி காலியிடம் 1,370 ச.அடி அளவில் புதிய அதிநவீன ஆவின் பாலகம் (High Tech Parlour) அமைத்து மகளிர் சுயஉதவி குழுக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பொருளாதார மேம்பாடு உயரும் வகையில் விற்பனை முகவர்களாக வாய்ப்பு வழங்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு தேனி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் - லிட், தேனி மூலம் தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய முன்பகுதியில் தென்புறம் உள்ள திறந்தவெளி காலியிடம் 1,370 ச.அடி அளவில் புதிய அதிநவீன ஆவின் பாலகம் அமைப்பது வியாபார நோக்காக உள்ளதால் அரசு விதிகளுக்கு உட்பட்டு 3 ஆண்டு குத்தகை அடிப்படையில் இடம் வழங்கிடவும், மேற்கண்ட இடத்திற்கு அரசு நிர்ணயிக்கும் வாடகை தொகை செலுத்திடவும் மற்றும் எஞ்சியுள்ள பகுதியனை பசுமையாக்கி பராமரிப்பு மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி கோரி பிரேனை அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.814/2020/அ3)

**தீர்மான எண். 1377 அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் 02</u>**:

தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் வளாக முன் பகுதியில் உள்ள திறந்தவெளி காலியிட பகுதிகள் பராமரிப்பின்றி உள்ளதாக தெரிவித்து தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின் பேரில் தேனி மாவட்ட உதவி ஆட்சியர் அவர்கள் நேரில் பார்வையிட்டு பேருந்து நிலைய முன்பகுதியில் உள்ள திறந்தவெளி காலியிடத்தை பசுமையாக்கி பராமரிப்பு செய்து அழகுபடுத்த தெரிவித்துள்ளார்.

மேலும், தோட்டக்கலை துணை இயக்குனர், தேனி அவர்களின் கடிதம் ந.க.எண்: இ2/1327/2020 நாள்: 27-02-2020-ம் தேதிய கடிதத்தில் தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய முன்பகுதியில் வடக்கு பகுதியில் உள்ள திறந்தவெளி காலியிடத்தில் சுமார் 35 செண்ட் பரப்பளவில் தோட்டக்கலைத்துறை சார்பில் அழகு தோட்டம் மூலிகை தோட்டம் அமைத்து அரசு தோட்டக்கலை பண்ணை பணியாளர்கள் கொண்டு பராமரித்திட அனுமதி கோரப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு தோட்டக்கலைத்துறை மூலம் தேனி - அல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய மேற்கு பகுதி வடக்க பக்கத்தில் உள்ள சுமார் 35 செண்ட் இடத்தில் அழகு தோட்டம் மூலிகை தோட்டம் அமைத்து பராமரிப்பு மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி கோரி பிரேனை அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.787/2020/அ3)

**<u>தீர்மான எண். 1378 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் 03</u>**:

தேனி – அல்லிநகரம் நகராட்சியின் பாதாள சாக்கடை திட்டம் செயல்பாட்டின் கீழ் உள்ள கழிவு நீர் குழாய் லையன்கள் ( Sewer Lines ), ஆய்வுத்தொட்டிகள் ( Chambers ), கழிவுநீர் உந்து நிலையங்கள் ( Lift Stations ), மற்றும் பிரதான உந்து நிலையம் ( Main Pumping Station ), ஆகியவைகளை தனியார் மூலம் ஓர் ஆண்டுக்கான மதிப்பீடு தொகை ரூ. **32.23** இலட்சம் வீதம் **3** ஆண்டுகளுக்கு பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணி செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். **23656/2013**/DO1 நாள். **06.02.2018**ன்படி மேற்காணும் பணிக்கு ஒப்பந்த விதிகளின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இப்பணியினை **1** ஆண்டிற்கு மட்டும் தனியார் மூலம் செய்வதற்கு அனுமதி வழங்கி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய V.V.V.CONSTRUCTIONS - Chennai - என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று இப்பணியினை V.V.V.CONSTRUCTIONS - Chennai என்ற நிறுவனம் செய்வதற்கு 27.04.2018-ம் தேதியன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு முதல் கட்டமாக **27.04.2018** ம் தேதி முதல் **30.04.2019** ம் தேதி வரையும் **2**வது கட்டமாக **01.05.2019**ம் தேதி முதல் **30.04.2020**ம் தேதி வரையும் ஒப்புதல் பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு, தற்போது பணிக்கான உரிமகாலம் **30**.04.2020-ம் தேதியுடன் முடிவடையும் நிலையில் உள்ளதால், மேலும் ஓர் ஆண்டிற்கு உரிம காலத்தினை நீட்டிப்பு செய்யவும், இப்பணியினை மேலும் ஓர் ஆண்டுக்கு V.V.V.CONSTRUCTIONS - Chennai - என்ற நிறுவனத்திற்கு சென்ற ஆண்டில் வழங்கப்பட்ட தொகை ரூ. 33.82 /– இலட்சத்தில், தற்போது மேலும் 5% உயர்த்தி V.V.V.CONSTRUCTIONS - Chennai – என்ற நிறுவனமே செய்வதற்கு அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.3354/2018/இ3)**

**<u>தீர்மான எண். 1379 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 04</u>:

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு சந்தையில் Reliance Info Comm Ltd., நிறுவனத்தின் சார்பாக செல்போன் கோபுரம் அமைத்திட காலியிடம் குத்தகைக்கு விடப்பட்டது (குத்தகை உரிமம் எண்: 125/2005314).

மேற்கண்ட செல்போன் கோபுரம் 20-01-2013 முதல் செயல்பாட்டில் இல்லை எனவும், அதனால் மேற்கண்ட காலத்திற்கு குத்தகை தொகை செலுத்த இயலவில்லை என Reliance Communications நிறுவனத்தின் கடிதம் எண்: TN Reliance Row - 07/2019 நாள்: 24-05-2019 தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே 2012-13 பிப்ரவரி மாதம் முதல் 2017-18 மார்ச் மாதம் கணினியில் தவறுதலாக எழுப்பப்பட்டுள்ள கேட்பு தொகை ரூ: 9,23,813/- நீக்கம் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :**

அ) கிழக்கு சந்தையில் Reliance Info Comm Ltd., நிறுவனத்தின் சார்பாக அமைக்கப்பட்ட செல்போன் கோபுரம் தற்பொது பயன்பாட்டில் இல்லாததாலும் மற்றும் Reliance Communications நிறுவனம் தற்போது செயல்பாட்டில் இல்லாததாலும் மேற்கண்ட தொகையினை தற்போது வசூல் செய்திட வழிவகை இல்லாத நிலையில் மேற்கண்ட கேட்பு தொகை ரூ: 9,23,813/- நீக்கம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2785/2018/அ3)

**<u>தீர்மான எண். 1380 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 05</u>:

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான மேற்கு சந்தை ஸ்டால் எண்: 57 (வரிவிதிப்பு எண் : 125/2015051) திரு.A.E.S.குமரேசன் என்ற பெயரில் உள்ளது.

மேற்கண்ட கடையில் திரு.A.E.S.குமரேசன் மற்றும் திரு.M.வேட்டை கருப்பசாமி இருவரும் கூட்டாக தொழில் செய்த நிலையில், திரு.A.E.S.குமரேசன் என்பவர் குடும்ப சூழ்நிலை காரணமாக கூட்டுத் தொழிலிருந்து விலகிக் கொள்வதாக கூட்டு வியாபார விலகல் பத்திரம் வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் மேற்கண்ட குத்தகை இனத்தினை தமது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட கோரி திரு.M.வேட்டை கருப்பசாமி என்பவரால் உரிய கட்டணம் செலுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :**

அ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்: 92 நாள்: 03-07-2007-ன் படி மேற்கு சந்தை ஸ்டால் எண்: 57 (வரிவிதிப்பு எண் : 125/2015051) திரு.A.E.S.குமரேசன் என்பவர் பெயரிலிருந்து திரு.M.வேட்டை கருப்பசாமி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.841/2020/அ3)

**<u>தீர்மான எண். 1381 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 06</u>:

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி அலுவலர் குடியிருப்புகளுக்கு வழங்கப்பட்ட இணைப்புகளுக்கு கீழ்க்கண்டவாறு குடிநீர் வரி செலுத்தவேண்டியுள்ளது.

| வ.எண் | குழாய் இணைப்பு எண் | உரிமையாளர் பெயர் | 2018-19- வரை நிலுவை ( ரூ ) | மேல்வரி (Cess) ( ரூ) | மொத்தம் ( ரூ ) | 2019-20 ( ரூ ) | மேல் வரி ( Cess ) ( ரூ) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | 125/003/00005 | தனிஅதிகாரி (நகரமைப்பு அலுவலர் குடியிருப்பு ) | 9150.00 | 152.50 | 9302.50 | 970.00 | 10.00 | 980.00 |
| 2 | 125/003/00006 | தனிஅதிகாரி (திரு.பி. காமராஜ் ப.எ) | 7800.00 | 120 | 7920.00 | 970.00 | 10.00 | 980.00 |
| 3 | 125/003/00007 | தனிஅதிகாரி (திரு.எம். | 9010.00 | 147.50 | 9157.50 | 970.00 | 10.00 | 980.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆனந்தன் ( **Death** ) | | | | | | |
| 4 | 125/003/00008 | தனிஅதிகாரி (திரு.எம். முகம்மது மைதீன்( அ.உ) | 7800.00 | 120.00 | 7920.00 | 970.00 | 10.00 | 980.00 |
| 5 | 125/003/00009 | தனிஅதிகாரி (திருமதி.லதா ( வ.உ) | 7800.00 | 120.00 | 7920.00 | 970.00 | 10.00 | 980.00 |
| 6 | 125/003/00010 | தனிஅதிகாரி (காலியிடம்) | 9320.00 | 155.00 | 9475.00 | 970.00 | 10.00 | 980.00 |
| 7 | 125/003/000011 | தனிஅதிகாரி (திரு.எம். அய்யனார். இ.நி.உ) | 8300.00 | 140.00 | 8440.00 | 970.00 | 10.00 | 980.00 |
| 8 | 125/003/00012 | தனிஅதிகாரி (திருமதி.கலா. அ.உ) ( **Death** ) | 7950.00 | 132.50 | 8082.50 | 970.00 | 10.00 | 980.00 |
| 9 | 125/003/00013 | தனிஅதிகாரி (திரு.எம்.தனபாண்டி.(இ.நிஉ)( **Death** ) | 8000.00 | 135.00 | 8135.00 | 970.00 | 10.00 | 980.00 |
| 10 | 125/003/00014 | தனிஅதிகாரி (திருமதி.ராஜீ(அ.உ) | 6900.00 | 115.00 | 7015.00 | 970.00 | 10.00 | 980.00 |
| 11 | 125/003/00015 | தனிஅதிகாரி (திரு.கே. செல்வம் (ஓட்டுனர் ) | 8406.00 | 142.50 | 8548.50 | 970.00 | 10.00 | 980.00 |
| 12 | 125/003/00016 | தனிஅதிகாரி (திருமதி.கே.ராணி (இ.நி.உ ) | 5400.00 | 90.00 | 5490.00 | 970.00 | 10.00 | 980.00 |
| 13 | 125/003/00017 | தனிஅதிகாரி (திருமதி. பாமினி (அ..உ ) | 8088.00 | 132.50 | 8220.50 | 970.00 | 10.00 | 980.00 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | 125/003/00018 | தனிஅதிகாரி (திருமதி. எஸ். புவனேஸ்வரி(இ. நிஉ ) | 4950.00 | 82.50 | 5032.50 | 970.00 | 10.00 | 980.00 |
| 15 | 125/003/00019 | தனிஅதிகாரி (திரு.என்.எஸ்.ஆனந்த்(நீ.ப. பா ) | 7950.00 | 132.50 | 8082.50 | 970.00 | 10.00 | 980.00 |
| 16 | 125/003/00020 | தனிஅதிகாரி (காலியிடம் ) | 9484.00 | 160.00 | 10294.00 | 970.00 | 10.00 | 980.00 |
| 17 | 125/003/00020 | தனிஅதிகாரி (பொறியாளர் ) | 9906.00 | 165.00 | 10071.00 | 970.00 | 10.00 | 980.00 |
| **மொத்தம்** | | | **136214.00** | **2242.50** | **139106.50** | **16490.00** | **170.00** | **16660.00** |
| **ஆகமொத்தம்** | | | | | | | | **155766.50** |

அ) ஏற்கெனவே பணியாளர்களின் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டு காலங்கடந்த வைப்புத்தெகை ( Lapsed Deposit ) கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது தொகை ரூ.139107.00/-ஐ 2018-19 ஆம் ஆண்டு முடிய வரவு வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>** அ) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.489/2020/இ2)

**<u>தீர்மான எண். 1382 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 07</u>:

**2020-2021 ம் ஆண்டு குடிநீர் நிதியின்** கீழ்,தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான, பொம்மையகவுண்டன்பட்டியில் தற்போது புதிதாக கட்டிமுடிக்கப்பட்டுள்ள சுகாதாரப் பணியாளர்களுக்கான குடியிருப்புகளில் தேவயான குடிநீர் தேவைக்கு, அதற்கான தொட்டி மற்றும் பைப்லைன் அமைத்து குடிநீர் வசதி ஏற்படுத்துவதற்கு மதிப்பீட்டுத்தொகை ரூ. 9.50 இலட்சம் ஆகும். எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ. 9.50 இலட்ச ( ரூபாய் ஒன்பது இலட்சத்தி ஐம்பதினாயிரம் மட்டும் ) த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**<u>அலுவலககுறிப்பு:</u>** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2020/இ2)

**<u>தீர்மான எண். 1383 அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் 08</u>**:

**2020-2021 ம் ஆண்டு குடிநீர் நிதி**யின் கீழ் ,தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 17 முதல் 33 வரையிலான பகுதிகளில் பொது மக்களின் தண்ணீர் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ள மினி பவர் பம்ப்களில் ஏற்படும் பழுதுகளை ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்ததாரர் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரு 8.50 இலட்சம் ஆகும். எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ. 8.50 இலட்ச ( ரூபாய் எட்டு இலட்சத்தி ஐம்பதினாயிரம் மட்டும் ) த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**<u>அலுவலககுறிப்பு:</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2020/இ2)

**<u>தீர்மான எண். 1384 அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் 09</u>**:

**2020-2021 ம் ஆண்டு குடிநீர் நிதி**யின் கீழ்,தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 16 வரையிலான பகுதிகளில் பொது மக்களின் தண்ணீர் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ள மினி பவர் பம்ப்களில் ஏற்படும் பழுதுகளை ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்ததாரர் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரு 8.50 இலட்சம் ஆகும். எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ. 8.50 இலட்ச ( ரூபாய் எட்டு இலட்சத்தி ஐம்பதினாயிரம் மட்டும் ) த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**<u>அலுவலககுறிப்பு</u>**:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2020/இ2)

**<u>தீர்மான எண். 1385 அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் 10</u>**:

**தேனி ___ அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிழதலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.**

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | தமிழக நியூஸ், திருச்சி | எண்: 752 நாள்: 02-02-2020 | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி. வெளியீட்டு ஆணை எண்: 21/ ஒப்ந்தப்புள்ளி / விளம்பரம் / 2020 நாள்: 01-02-2020. | ரூ: 49,200/- |

மேற்ககண்ட தொகை ரூ:49,200/- (ரூபாய்: நாற்பத்து ஒன்பது ஆயிரத்து இருநூற்று மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்24 /2020/அ3)

**தீர்மான எண். 1386 அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 11:

தேனி —— அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிழதலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | தமிழக நியூஸ், திருச்சி | எண்: 767 நாள்: 01-03-2020 | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி. வெளியீட்டு ஆணை எண்: 56/ ஒப்ந்தப்புள்ளி / விளம்பரம் / 2020 நாள்: 29-02-2020. | ரூ: 46,800/- |

மேற்ககண்ட தொகை ரூ:46,800/- (ரூபாய்: நாற்பத்து ஆறு ஆயிரத்து என்னூறு மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.24 /2020/அ3)

**தீர்மான எண். 1387 அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் 12</u>:**

தேனி - அல்லிநகரம் நகராட்சி குத்தகை நிலுவை தொகை வசூலிப்பது தொடர்பாக பிரதிவாதிக்கு (குத்தகைதாரர்) நாளிதழில் மாநில அளவில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | வழக்கு விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | S.K. Advertising, சென்னை. | எண்: SK/051 / CHE/2019-20 நாள்: 07-02-2020 | சார்ப நீதிமன்றம், தேனி வழக்கு O.S. No: 371/2015<br>குத்தகை உரிமம் எண்: 125/2005050 காமராஜர் பேருந்து முனைய கிழக்கு பக்க கடை எண்: 21 பி | ரூ: 2,940/- |

மேற்ககண்ட தொகை ரூ:2,940/- (ரூபாய்: இரண்டு ஆயிரத்து தொளாயிரத்து நாற்பது மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.24/2020/அ3)

**<u>தீர்மான எண். 1388 அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் 13</u>:**

தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலக கட்டடத்தில் காவல் பணிக்கு தற்போது போதுமான பணியாளர்கள் இல்லாத நிலையினை கருத்தில் கொண்டு, காவல் பணிக்கு முன்னாள் படைவீரர் நல வாரியம் ( TEXCO ) பணியாளர்கள் மூலம் தினசரி 3 பணியாளர்கள் வீதம் நாள் ஒன்றுக்கு 8 மணி நேரம் பணிபுரிந்து வருகிறார்கள். இந்நிலையில் மேற்படி பணியாளர்களின் உரிமக்காலம் காலம் ஜனவரி 2020 மாதத்துடன் முடிவடைந்த நிலையில் அவர்களின் உரிமக்காலத்தினை மேலும் ஓராண்டுக்கு முன்னாள் படைவீரர் நல வாரியம் ( TEXCO ) பணியாளர்கள் நியமனம் செய்திட்ட வகையில் TEXCO நிறுவனத்தின் கடிதம் எண். 8157 / Municipality / Theni / 2020 - 2021 / 02 / A10, நாள். 01.02.2020 - ன் தேதிய கடிதத்தில் காவல் பணிக்கு பணியாளர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 21990/- வீதம் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 2020 - 2021 ம் ஆண்டு ஊதியம் வழங்கப்படவுள்ள உத்தேசமான செலவினத்தொகை ரூ. ரூ.850000/- ஆகும். மேற்படி செலவினத்தொகையினை இந்கராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 950 / 2020 / இ1)**

**<u>தீர்மான எண். 1389 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 14</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி காமராஜ் பேருந்து முனையத்தில் அம்மா உணவகம் அமைக்கப்பட்டு கடந்த 24.05.2015 -ம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட அம்மா உணவக செயல்பாட்டிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( மா.ந.2 ) துறை அரசாணை ( நிலை ) எண். 79, நாள் 31.15.2013 மற்றும் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் ( மா.ந.2 ) துறை அரசாணை ( நிலை ) எண். 118, நாள். 26.06.2014 - ன்படி கீழ்கண்டவாறு செலவினங்கள் மேற்கொள்ளலாம், மேலும் அம்மா உணவக செயல்பாட்டிற்கு 2020 - 2021 -ம் ஆண்டுக்கான உத்தேச செலவினம் ரூ. 45.00 இலட்சம் ஆகும். மேற்படி செலவினத்தொகையினை இந்கராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ ) | பணியாளர்கள் ஊதியம் | 12 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் 250/- வீதம் |
| ஆ ) | அரிசி | ஒழுங்கு முறை விற்பனை கூடம் மூலம் வாங்கலாம் |
| இ ) | பால் மற்றும் தயிர் | ஆவின் நிறுவனம் மூலம் வாங்கலாம் |
| ஈ ) | சமையல் எரிவாயு | அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் மூலம் வாங்கலாம் |
| உ ) | காய்கறி | உள்ளூர் சந்தை விலைக்கு ஏற்ப உழவர் சந்தையில் நாள் ஒன்றுக்கு ரூ.1000/-க்கு மிகாமல் வாங்கலாம் |
| ஊ ) | பலசரக்கு | உள்ளூர் சந்தை விலைக்கு ஏற்ப கூட்டுறவு பண்டக சாலையில் வாங்கலாம் |
| எ ) | உணவுப்பொருட்கள் ( இட்லி, சாம்பார் சாதம், தயிர் சாதம் விலை இரசீது ) | கூட்டுறவு அச்சகங்களில் அடிச்சடிக்கலாம் |
| ஏ ) | இதர செலவினங்கள் | உள்ளூர் சந்தை விலைக்கு ஏற்ப வாங்கலாம் |

**<u>அலுவலகக்குறிப்பு</u> :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அம்மா உணவகத்திலிருந்து பெறப்படும் வருவாய்க்கு அதிகமாக மேற்கொள்ள வேண்டிய செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 949/ 2020 / இ1)

**<u>தீர்மான எண். 1390 அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 15</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சி பொதுப்பிரிவில் பணிபுரிந்து வரும் திருமதி.க.பாமினி, அலுவலக உதவியாளர் தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக திண்டுக்கல் மாநகராட்சிக்கு அலுவலக உதவியாளராக பணயிட மாறுதல் வழங்க கோரியுள்ளார். அதே போன்று திண்டுக்கல் மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் திருமதி.அ.ஈஸ்வரி என்ற சாந்தி, அலுவலக உதவியாளர் தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கு அலுவலக உதவியாளராக பணியிட மாறுதல் வழங்க கோரியுள்ளார்.

மேற்படியாளர்களது 06.03.2020ஆம் தேதியிட்ட மன மொத்த பணியிட மாறுதல் விண்ணபபம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.842/2020/சி1)

**தீர்மான எண். 1391 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 16:

**2020-2021 ம் ஆண்டு குடிநீர் நிதி**யின் கீழ்,தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகத்திற்காக பதிக்கப்பட்டுள்ள பைப்லைன்கள் & பம்பிங்க் லைன் ( Distribution Main and Pumping Main ) ஆகியவைகளில் ஏற்படும் பழுதுகள் மற்றும் உடைப்புகளை சரி செய்யும் பொருட்டு, மேற்கண்ட பராமரிப்பு பணியை ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்ததாரர் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரு 5.00 இலட்சம் ஆகும். எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ. 5.00 இலட்ச ( ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும் ) த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2020/சி1)

**தீர்மான எண். 1392 அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 17:

**2020-2021 ம் ஆண்டு குடிநீர் நிதி**யின் கீழ்,தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான பழனிசெட்டிபட்டி மற்றும் வீரப்ப ஆய்யனார் கோவில் குடிநீர் திட்டத்தில், மோட்டார் பம்ப், மின் இணைப்பு மற்றும் Intake -well ஆகியவைகளில் ஏற்படும் பழுதுகளை சீர் செய்யும் பொருட்டு அதற்கான பராமரிப்பு பணியினை ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்ததாரர் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரு 8.00 இலட்சம் ஆகும். எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ. 8.00 இலட்ச ( ரூபாய் எட்டு இலட்சம் மட்டும் ) த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2020/இ2)

**தீர்மான எண். 1393 அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 18:

தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலக கட்டடத்தில் காவல் பணிக்கு பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு கீழ்கண்ட மாதங்களின் அகவிலைப்படி ஊதியம் உயர்வு செய்யப்பட்டுள்ள நிலுவைத் தொகையினை அன்னார்களுக்கு வழங்க Tamilnadu

Ex - Servicemen's Corporation Limited Chennai நிறுவனத்திடமிருந்து கேட்பு பட்டியல் வரபெற்றுள்ளது.

**( ரூபாயில் )**

| **வ.எண்.** | **பட்டியல் எண் மற்றும் நாள்** | **அகவிலைப்படி வழங்க வேண்டிய மாதங்கள்** | **மீதம் வழங்க வேண்டிய தொகை ( வரிகள் உட்பட )** |
|---|---|---|---|
| 1 | 229702, 01.06.2017 | 01.04.2015 to 31.03.2016 | 137296 |
| 2 | 250595, 20.03.2018 | 01.04.2017 to 31.01.2018 | 78107 |
| 3 | 260724, 27.08.2018 | 01.04.2018 to 31.07.2018 | 5582 |
| **மொத்தம்** | | | **220985** |

மேற்படி மொத்த தொகை ரூ.220985/- ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

அ) மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 925 / 2020 / இ1)**

**<u>தீர்மான எண். 1394 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 19</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சியின் 2020-2021-ஆம் நிதியாண்டிற்கு அனைத்து பிரிவிற்கும் ஏற்படக்கூடிய வரவு மற்றும் செலவினங்கள் மேற்கொள்ளும் பொருட்டு, வருவாய் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் கல்விநிதி கணக்குகளில் சென்ற நதியாண்டு 2019-2020-ல் மேற்கண்ட வரவு மற்றும் செலவினத்துடன் ஒத்திசைவு செய்யப்பட்டதில் 5% வரவும், 10% செலவும் கூடுதலாக உள்ளது என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட உத்தேச வரவு செலவு திட்டம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**

கூடுதல் செலவினத்தை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3/2020/பி2)

**<u>தீர்மான எண். 1395 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 20</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்கள் குத்தகைதாரரால் தொடர்ந்து வாடகை செலுத்திட இயலாத நிலையில் பிப்ரவரி -2020 முதல் நகராட்சியால் கையகப்படுத்தப்பட்டது.

மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு பிப்ரவரி 2020 முதல் குத்தகை உரிமத்தினை ரத்து செய்திடவும், மேலும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | இனம் | குத்தகைதாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | 125/2005025 | பேருந்து நிலைய தங்கும் விடுதி கீழ் உள்ள கிழக்கு பக்க கடை எண் 1 | டி.கண்ணன் |
| 2 | 125/2005027 | பேருந்து நிலைய தங்கும் விடுதி கீழ் உள்ள கிழக்கு பக்க கடைஎண் 3 | ஆர்.தியாகராஜன் |
| 3 | 125/2005028 | பேருந்து நிலைய தங்கும் விடுதி கீழ் உள்ள கிழக்கு பக்க கடை எண் 4 | டி.நாகலட்சுமி |
| 4 | 125/2005016 | பேருந்து நிலைய தங்கும் விடுதி கீழ் உள்ள மேற்கு பக்க கடை எண் 1 | வி.மாணிக்கம் |
| 5 | 125/2005023 | பேருந்து நிலைய தங்கும் விடுதி கீழ் உள்ள மேற்கு பக்க கடை எண் 8 | பி.ரவிக்குமார் |

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1414/2019/அ3)

**தீர்மான எண். 1396 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 21:

தேனி - அல்லிநகரம் நகராட்சி ரத்து செய்யப்பட்ட குத்தகை இனங்களுக்கான நிலுவைத் தொகையினை மேற்கண்ட குத்தகைதாரர்களின் பெயரில் காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ள நிலுவைத் தொகையில் ஈடுசெய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | குத்தகைதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | V.சரவணன் | ரூ:93,000/- |
| 2 | ரவிக்குமார் | ரூ:58,020/- |
| 3 | கண்ணன் | ரூ:1,01,682/- |
| | மொத்தம் | ரூ:2,52,702/- |

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1414/2019/அ3)

**தீர்மான எண். 1397 அனுமதிக்கப்பட்டது.**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
தேனி-அல்லிநகரம் நகராட்சி